# பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பதவி தொடர்பாக சிறந்த அனுபவமும் தேவையான தகைமைகளையும் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

1. **பதவி: நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (தொழில்நுட்ப சேவை)**
   **வெற்றிடங்களின் எண்ணிக்கை: 08**
   **சேவை வகுதி இணை அதிகாரி - (MA-3)**
   **சம்பள அளவு:** 32,200/-,10x445/-,11x660/-, 10x730/-, 5x750/- = ரூபா 54,960/- (MA 3-2016) (மாதாந்தம்) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
   **ஆரம்ப சம்பள நிலை:** 32,200/-

   **கல்வித் தகைமைகள்:**
   சந்தைப்படுத்தல், வர்த்தகம், வியாபார நிர்வாகம், பொருளியல் போன்ற துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

2. **பதவி: நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி)**
   **வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**
   **சேவை வகுதி இணை அதிகாரி - (MA-3)**
   **சம்பள அளவு:** ரூபா 32,200/-,10x445/-,11x660/-, 10x730/-, 5x750/- = ரூபா 54,960/- (MA 3-2016) (மாதாந்தம்) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
   **ஆரம்ப சம்பள நிலை:** 32,200/-

   **கல்வித் தகைமைகள்:**
   இரசாயனவியல், நுண்ணுயிரியல், தாவரவியல் போன்ற துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **ஆட்சேர்க்கும் முறை:**
   எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

   **வயதெல்லை:**
   விண்ணப்பங்களை முடிவுறுத்தப்படும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ளவர்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள்/ மாகாண அரசாங்க / அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகளில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

   **தெரிவு செய்யும் முறைமை:**
   கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

3. **பதவி: வெளிக்கள உதவியாளர்**
   **வெற்றிடங்களின் எண்ணிக்கை: 02**
   **சேவை வகுதி முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) - (MA- 1-1)**
   **சம்பள அளவு:** ரூபா 27,910/-, 10x300/-, 7x350/-, 4x495/-, 20x660/- = ரூபா 48,540/- (MA1-1 2016) (மாதாந்தம்) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
   ஆரம்ப சம்பள நிலை: 27,910/-

   **கல்வித் தகைமைகள்:**
   i. க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்கள மொழி / தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

   **மற்றும்**

   ii. க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரு தடவையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (பொது வினாத்தாள் தவிர)

   அரசாங்கம் அல்லது தனியார் துறையில் பதவியோடு தொடர்புடைய துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை முடிவுறுத்தப்படும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ளவர்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள் / மாகாண அரசாங்க / அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகளில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**தெரிவு செய்யும் முறைமை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

**ஏனையவை:**

i. இலங்கை பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**அனுகூலங்கள்:**

1. 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க சட்டத்தின் கீழான பணிக்கொடை.
2. அலுவலர்களுக்கான மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் / பணியாளர் நட்டஈட்டு காப்புறுதித் திட்டம்
3. ஊழியர் சேமலாப நிதியம் - ஊழியர் 10%, தொழில்வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய மேலதிக அனுகூலங்கள்.

விண்ணப்பதாரியின் தற்போதைய தொழில், சம்பள விபரங்கள், காலப்பகுதியுடனான முன்னைய பதவிகள் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் விண்ணப்பதாரியின் ஏனைய அனைத்து விபரங்கள் அத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்விசார், தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ்களை 2024.12.23ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள்/ மாகாண அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தரமாக ஏற்கனவே இருப்பவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அதிகாரசபையின் உரித்தான பிரிவு தலைமைகளூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

முடிவுறுத்தப்படும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது திணைக்களங்களின் /நிறுவனங்களின் தலைமையூடாக அனுப்பப்படாதவைகள் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரத்தை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் www.cda.gov.lk என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 54, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**